بسم الله الرحمن الرحيم          نحمده ونصلي على رسوله الكريم          وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 40

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

13 ஸஃபர் 1442 ஹிஜ்ரி கமரி 01 அஹா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

01 அக்டோபர் 2020


### அல்லாஹ்வின் கட்டளை

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا

அல்லாஹ்வுக்கும் இத்தூருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள், அல்லாஹ் அருள் புரிந்தவர்களான நபிமார்கள், சித்தீக்குள், ஷஹீதுகள், ஸாலிஹீன்கள் ஆகியோரைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள். இத்தகையோர் (மிக்க) நல்ல நண்பர்களாவர் (4:70)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் முழுமைத்தன்மை எந்த அளவுக்கு இருந்ததென்றால், ஒரு மூதாட்டிகூட அன்னாரின் கையை பிடித்திருந்தால், அவர்கள் எழுந்து விடுவார்கள். மேலும் அவருடைய பேச்சை மிகவும் கவனமாகக் கேட்பார்கள். (மூதாட்டியான) அவர், தானே கையை விடாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கையை விட்டதில்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளிகளும் அருள்களும்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலைமை சில இடங்களில் எந்த அளவுக்கு எளிமையிலும், தன்னடக்கத்திலும் உயர்வை அடைந்திருப்பதாகத் தென்படுகிறதென்றால், அங்கு அதே அளவுக்கு அன்னார் பரிசுத்தத்தன்மையின் ஆதரவு மற்றும் வலுசேர்ப்பதிலும் ஒளிமயமாக இருக்கின்றார்கள். நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் அதனை தனது செயலால் செய்து காட்டினார்கள். அன்னாரின் ஒளிகள் மற்றும் அருள்கள் எந்த அளவுக்கு பரந்ததாக இருக்கின்றது என்றால், மறுமை வரை தன் நிழலே காணப்படுகிறது.

இக்காலத்தில் இறைவனிடமிருந்து இறங்கும் அருள்களும் கருணைகளும் அன்னார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாலேயே கிடைக்கிறது. நான் உண்மையைக் கூறுகிறேன். மேலும் எனது அனுபவத்தில் கூறுகிறேன். ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதால் கிடைக்கும் உயர்ந்த படித்தரத்தை பெறாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் மூழ்காதவரை எவரும் இறை திருப்தியைப் பெற முடியாது. இதற்கான சான்று திரக்குர்ஆனிலிருந்தே கிடைக்கிறது.

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

மேலும் இறைவனின் இந்த வசனத்திற்கு உயிருள்ள சான்று நான் ஆவேன். இறைவனின் அன்பிற்குரியவர்கள், இறை நேசர்களுக்கென்று திருக்குர்ஆனில் நியமிக்கப்பட்டுள்ள அந்த அடையாளங்களுடன் என்னை அடையாளங்கண்டு கொள்ளுங்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் முழுமைத்தன்மை எந்த அளவுக்கு இருந்ததென்றால், ஒரு மூதாட்டிகூட அன்னாரின் கையை பிடித்திருந்தால், அவர்கள் எழுந்து விடுவார்கள். மேலும் அவருடைய பேச்சை மிகவும் கவனமாகக் கேட்பார்கள். (மூதாட்டியான) அவர், தானே கையை விடாத வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கையை விட்டதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 185–185 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## எந்த மேன்மையிலும் பிறர் உங்களை முந்திச் சென்று விடக் கூடாது என்பதை எப்போதும் நீங்கள் ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்

وَلِكُلٍّ وِّجْهَةٌ هُوَ مُوَلِّيْهَا فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ (2:149) வசனத்தின் விளக்கவுரையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உலகில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு குறிக்கோள் இருக்கிறது. சிலருக்கு உண்ணல் குடித்தல் போன்றவற்றில் ஆசை இருக்கும். சிலருக்கு வியாபாரத்தில் ஆசை இருக்கும். சிலருக்கு நல்ல ஆடை அணிவதற்கு விருப்பம் இருக்கும். சிலருக்கு புறம்பேசுதல், தீயதைப் பேசுதல் ஆகியவற்றில் விருப்பம் இருக்கும். சிலருக்கு சண்டை சச்சரவுகள் செய்வதில் விருப்பம் இருக்கும். சுருக்கமாக, ஏதாவது ஒரு பொருளை தனது நோக்கமாகக் கொள்ளாத எந்தவொரு மனிதனும் இல்லை. ஏழையிலும் ஏழையாக இருப்பவரும், அறிவீனர்களிலும் அறிவீனராக இருப்பவர்களிலும் தனக்கு முன்னால் ஏதாவதொரு நோக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். சிலருடைய நோக்கம் தலைவராக வேண்டும் என்பதாக இருக்கிறது. சிலருக்கு உயர்ந்த கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கம் இருககிறது. சிலருக்கு அரசியல், ஆளுமை பற்றிய நோக்கம் இருக்கிறது.

எனவே அல்லாஹ் கூறுகிறான்: ஒவ்வொரு மனிதனுக்கு முன்னாலும் ஏதாவதொரு நோக்கம் இருக்கும்போது, எதில் எல்லா நல்ல விஷயங்களும் இருக்கின்றனவோ அதை நீங்கள் ஏன் கூறுவதில்லை? மற்றவர் உங்களை விட முன்னேறிச் செல்கின்ற எந்தவொரு நன்மையும் இருக்கக் கூடாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு முறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் இடையில் சண்டை வந்தது. அவர்கள் பிரிந்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வருத்தம் ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேறு யார் மூலமாவது இந்த விஷயம் தெரிய வந்தால் அவர்களுக்கு துன்பம் ஏற்படும் என்ற

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா ஜமாஅத் எந்தப் பிரிவின் அல்லது நிலைப்பாட்டின் வேற்றுமையின் மீதோ அல்லது கருத்து வேறுபாடுள்ள கண்ணோட்டங்களின் மீதோ, விளக்கவுரைகளின் மீதோ, விரிவுரைகளின் மீதோ நிலைநிற்கக்கூடிய ஜமாஅத் அல்ல; மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப மற்றும் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப இறுதிகாலத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரின் மூலமாக நிறுவப்பட்ட ஜமாஅத் ஆகும்**

عَلٰى دِيْنٍ وَّاحِدٍ

**பூமியில் இருக்கும் முஸ்லிம்கள் அனைவரையும் ஒரே மார்க்கத்தில் ஒன்றிணைப்பீராக.**

**எனக்கு ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகியவர்களோடு ஒரு உன்னதமான தொடர்பு உள்ளது. இந்தத் தொடர்பின் உண்மைத்துவம் கிழக்கு மற்றும் மேற்கின் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. நான் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் அவர்களின் இரு புதல்கர்களோடு அன்பு செலுத்துகிறேன். எவர் அவர்களோடு பகைமை கொள்வாரோ அவரோடு நான் பகைமை கொள்கிறேன்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நீதி நெறி தீர்ப்பவர்களின் ஜமாஅத் பேதமைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நிறுவப்பட்டுள்ளது. எதிர்ப்புகள், வழக்குகள், கடுமைகள் மற்றும் நச்சுப் பேச்சுகள் இருந்தும், ஒவ்வொருவருக்கும் தம் தரப்பிலிருந்து அமைதி, சமாதானம் மற்றும் துஆவுக்கான தூதுச் செய்தியே வழங்கப்படுகிறது**

**திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸுகளிலிருந்து தெரிய வரும் அந்த அடையாளங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்ற அல்லது நிறைவேறும் அந்தக் காலம் ஆகும். இதுவே என்று நிலைமைகள் எடுத்துரைக்கும்போது ஏன் நாம் அந்த நீதி நெறி தீர்ப்பவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரைத் தேடக்கூடாது! அவரே ஷியா, சன்னிகள், பல்வேறு பிரிவுகள் மற்றும் நிலைபாடுகளின் வேறுபாடுகளை முடிவுக்கு கொண்டு வந்து நம்மை ஒன்றிணைக்கக் கூடியவராவார்**

**இக்காலத்தில் இஸ்லாத்திற்கு தொண்டு செய்ய முடியும் என்றால், இஸ்லாத்தை பாதுகாக்க விருப்பம் இருக்குமென்றால் பிறகு இக்காலத்தில் இறைவனால் அனுப்பப்பட்டவருடன் இணைவதன் மூலமே அது நடைபெறும்**

**நமது வெற்றி காலத்தின் இமாமும், வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி அவர்களிடம் பைஅத் செய்வதில்தான் உள்ளது**

**அல்லாஹ் இதனையே நிர்ணயித்துள்ளான். அதாவது இந்த முறை வெளிப்படையான வெற்றி கிடைக்கும். இன்ஷா அல்லாஹ் ஹுஸைனின் பண்பைக் கொண்டவர்களுக்கு வெற்றி கிடைக்கும். மேலும் எதிரிகள் தோல்வியடைவார்கள்**

**நீதி நெறி தீர்ப்பவரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பம் மற்றும் குலாஃபாயே ராஷிதீன் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் மேன்மை தொடர்பான குறிப்புகள்**

**முஹர்ரம் நாட்களில் தரூது ஷரீஃப் அதிகமாக ஓதுவதன் பக்கமும் இதர துஆக்களின் பக்கமும் ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 ஆகஸ்ட் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஸுஹுர்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ் இக்காலத்தில் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நீதி நெறி தீர்ப்பவராக ஆக்கி அனுப்பியுள்ளான். எவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் ஒளியில் அனைத்து முஸ்லிம்களையும் ஒரே உம்மத்தாக ஆக்க வேண்டியிருந்ததோ; எவர்கள் பல்வேறு நிலைமைகள் மற்றும் பிரிவுகளின் தவறான விளக்கங்களையும் கிளை வேறுபாடுகளையும் அகற்றி ஒரே உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்க வேண்டியிருந்ததோ, முஸ்லிம்களுக்கு ஓர் ஒற்றுமையை வழங்க வேண்டியிருந்ததோ அந்த நீதி நெறி தீர்ப்பவராக அன்னார் வருகை தந்தார்கள்.

எனவே இன்று நாம் பார்க்கின்றோம்; முஸ்லிம்களின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் எந்த மக்கள் பொறுமையுடன் ஆழ்ந்து சிந்திப்பார்களோ இஸ்லாத்தின் பல்வேறு பிரிவுகளின் பேதமைகளின் வேதனையை உணர்ந்தார்களோ அவர்கள் கல்வி, மெய்யறிவு மற்றும் துஆக்களால் செயல்பட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து, மேலும் இலட்சக்கணக்கில் இவர்கள் ஒவ்வொரு வருடமும் இணைந்து கொண்டே செல்கின்றனர்.

ஆகவே அஹ்மதிய்யா ஜமாஅத் எந்தப் பிரிவின் அல்லது நிலைப்பாட்டின் வேற்றுமையின் மீதோ அல்லது கருத்து வேறுபாடுள்ள கண்ணோட்டங்களின் மீதோ, விளக்கவுரைகளின் மீதோ, விரிவுரைகளின் மீதோ நிலைநிற்கக்கூடிய ஜமாஅத் அல்ல; மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப மற்றும் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப

இறுதிகாலத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரின் மூலமாக நிறுவப்பட்ட ஜமாஅத் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்து, ஷியா சன்னிகளுக்கு மத்தியிலுள்ள அல்லது ஏதேனும் பிரிவுகள் மற்றும் கொள்கைக்கு மத்தியிலுள்ள இந்த பேதமைகள் முடிவுக்கு கொண்டு வந்து ஒரே உம்மத்தாக ஆக வேண்டியுள்ளது. நாம் முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையைத் தெரியப்படுத்தி ஒரே உம்மத்தாக வேண்டும். இந்தப் பணிக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்கள். இந்தப் பணிக்காகவே அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையால் ஜமாஅத்தை உருவாக்கினார்கள். இந்தப் பணியை செய்வதற்காகவே அல்லாஹ் அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இவ்வாறு கூறினான்:

عَلٰى دِيْنٍ وَّاحِدٍ

பூமியில் இருக்கும் முஸ்லிம்கள் அனைவரையும் ஒரே மார்க்கத்தில் ஒன்றிணைப்பீராக.

(தத்கிரா பக்கம் 490 – தொகுதி எண் 4)

ஆக அல்லாஹ் அவர்களிடம் ஒப்படைத்த இந்தப் பணியே அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அதன் பைஅத்தில் வந்து அவர்களால் நிறுவப்பட்ட ஜமாஅத் செய்ய வேண்டிய பணியாக இருக்கிறது. மேலும் இதனையே நாம் அல்லாஹ்வின் அருளால் கடந்த 130 ஆண்டுகளாக செய்து வருகிறோம். அல்லது கிலாஃபத் அமைப்பு ஆரம்பமானதிலிருந்து 112 வருடங்களாக செய்து வருகிறோம்.

இதற்கு முன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தப் பணியை செய்தார்கள். திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறை, சஹீஹான ஹதீஸுகள் மற்றும் காலத்தின் இமாமான நீதி நெறி தீர்ப்பவரின் ஞானமிக்க விளக்கவுரைகளின் ஒளியில், நாம் முஸ்லிம்களக்கு மட்டும் எடுத்துரைப்பதில்லை; மாறாக, முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இஸ்லாத்தின் அழகிய போதனையை எடுத்துக்கூறி அவர்களை இஸ்லாத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்கிறோம்.

ஆக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நீதி நெறி தீர்ப்பவர்களின் ஜமாஅத் பேதமைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நிறுவப்பட்டுள்ளது. எதிர்ப்புகள், வழக்குகள், கடுமைகள் மற்றும் நச்சுப் பேச்சுகள் இருந்தும, ஒவ்வொருவருக்கும் தம் தரப்பிலிருந்து அமைதி, சமாதானம் மற்றும் துஆவுக்கான தூதுச் செய்தியே வழங்கப்படுகிறது. உண்மையை பரப்புவதிலிருந்தும், உண்மையை பேசுவதிலிருந்தும் நிச்சயமாக நாம் நின்றுவிடக்கூடாது. இதற்காகத் தியாகங்களையும் செயது வருகின்றோம். சண்டையும், ஏச்சுப் பேச்சும் நமது தரப்பிலிருந்து முன்னரும் ஏற்பட்தில்லை; இனியும் ஏற்படாது. இறை ஜமாஅத்துகளக்கு எதிர்ப்புகளும் ஏற்படுகின்றன; அவர்களுக்கு அநீதிகளையும் சகிக்க வேண்டி வருகிறது. ஆனால் இறுதியில் அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான்.

நாம் துஆ செய்கிறோம். நான் கூறியதுபோன்று, காலத்தின் இமாமின் தூதுச் செய்தியை எல்லா மார்க்கத்தின் மற்றும் எல்லா நாட்டின் மக்களின் மத்தியிலும் பரப்புவதற்கு முயற்சியும் செய்து வருவோம். ஆனால் முஸ்லிம் பொது மக்கள், பொறுமையான இயல்பை உடையவர்கள், உண்மையை தேடுபவர்கள், குழப்பங்களையும், கலகங்களையும் முடிவுக்கு கொண்டு வர விரும்பக்கூடியவர்கள், ஞானமிக்க அறிவுள்ள மக்களிடம் நான் கூறுகிறேன்: இந்த விஷயத்திலும் ஆழந்து சிந்தியுங்கள். நூற்றுக்கணக்கான வருடங்களாக – ஆரம்ப கால பத்து வருடங்கள் தவித ஆரம்பத்திலிருந்தே முஸ்லிம்கள், கருத்து வேறுபாடுகளில் மூழ்கி தமது ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பலவீனப்படுத்திக் கொண்டே சென்று வருகிறார்கள்.

இன்றைய நாட்களில் நாம் முஹர்ரம் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம். அது இஸ்லாமிய வருட கேலண்டரில் முதல் மாதமாகும். ஆங்கில வருடம் துவங்கும்பேது நாம் ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கிறோம். ஆனால் துர்பாக்கியம் என்னவென்றால், இஸ்லாமிய வருடம் துவங்கும்போது பல முஸ்லிம் நாடுகளில் இந்தப் பிரிவினைக் காரணமாக கொலைகளும், நாசங்களும் செய்யப்படுகின்றன. அந்த மார்க்கமோ, அமைதி மற்றும் சமாதானத்தின் மிக உயரிய போதனையை வழங்கக்கூடிய மார்க்கமாகும். ஏன் அதை ஏற்கக் கூடியவர்கள் தமது வருடத்தைக் குழப்பங்கள், சச்சரவுகள் மற்றும் கொலைகளால் துவங்குகின்றனர்?

நாம் சிந்திக்க வேண்டும். நாம் நமது தோரணைகளை மாற்ற வேண்டும். எவ்வாற நாம் முஸ்லிம்களை ஒரே சமுதாயமாக்கி, இந்தக் குழப்பங்களையும், பயங்கரவாதங்களையும் முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று நாம் பார்க்க வேண்டும். நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நமது எஜமானரும், நாம் பின்பற்றுவதற்குரியவர்களுமான ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள், இஸ்லாத்தின் ஆரம்பகால முன்னேற்றத்திற்குப் பிறகு வழிகேடான காலம் தொடர்பாக முன்னறிவித்திருந்தார்கள் என்றால், பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் ஏற்படும் என்ற நற்செய்தியையும் வழங்கியிருந்தார்கள்.

எந்த விவகாரத்தால் முஸ்லிம்களில் பிரிவினை ஏற்பட்டதோ அந்த விவகாரமே இறுதி காலத்தில் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் நிறுவப்பட்ட பிறகு முஸ்லிம்களை ஒரே சமுதாயமாக்கும் வழியாகவும் ஆகிவிடும். முஸ்லிம்களின் முன்னேற்றம் மற்றும் ஒற்றுமைக்கான ஓர் ஒளிரும் அடையாளமாகி விடும்.

திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸுகளிலிருந்து தெரிய வரும் அந்த அடையாளங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்ற அல்லது நிறைவேறும் அந்தக் காலம் ஆகும். இதுவே என்று நிலைமைகள் எடுத்துரைக்கும்போது ஏன் நாம் அந்த நீதி நெறி தீர்ப்பவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரைத் தேடக்கூடாது! அவரே ஷியா, சன்னிகள், பல்வேறு பிரிவுகள் மற்றும் நிலைபாடுகளின் வேறுபாடுகளை முடிவுக்கு கொண்டு வந்து நம்மை ஒன்றிணைக் கூடியவர் ஆவார். இந்த குருடர்களான பெயர்தாங்கி முஸ்லிம்களை பின்பற்றாதீர்கள். இவர்கள் தாமும் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தம்முடன் முஸ்லிம்களின் ஒரு பெரும் எண்ணிக்கையையும் மூழ்கடிக்க முயற்சி செய்கின்றனர்.

பாருங்கள். திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிலிருந்து தெரிய வரும் அந்த அடையாளங்கள் நிறைவேறிவிட்ட பின், அவர் யார் என்று நாம் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. அவரைத் தேட வேண்டிய தேவையுள்ளது. இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான வழிவகையாக ஆக்கி அல்லாஹ்வின் தரப்பிலிருந்து நிறுத்தப்பட்ட அவர் யார்? யாராவது நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அஹ்மதிகளாகிய நாம் கூறுகின்ற அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆவார்கள். அல்லாஹ் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான பணியை அவர்களிடம் ஒப்படைத்தான். அல்லது அவர்கள் மூலமாக அல்லாஹ் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை திகழ வைக்கின்றான். அல்லது வைப்பான். அவர்களே சண்டை சச்சரவுகளை அமைதி சமாதானமாக மாற்ற வேண்டும்.

ஆக நம்மிடம் அறிவு இருக்கின்றதென்றால், பிறகு நாம் முஹர்ரத்தை கவலைபடக் கூடிய அல்லது தமது காழ்ப்புணர்ச்சி, வக்கிரம் மற்றும் கோபத்தை வெளிப்படுத்தும் மாதமாக மட்டும் ஆக்கக்கூடாது. தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் வழிவகையாக மட்டும் ஆக்கக் கூடாது. மாறாக, ஒருவர் மற்றவரோடு அன்பு, நேசம் கொள்ளும் வகையில் ஆக்க வேண்டும். இஸ்லாத்தின் போதனையாக இருக்கும் அந்த உண்மையான போதனைகளின்படி செயல்பட வேண்டும். இந்தக் காலத்தில் அல்லாஹ் நீதி நெறி தீர்ப்பவர் எனும் அந்தஸ்தை வழங்கியுள்ள அந்த வழிகாட்டியின் பின் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் நாம் உண்மையான முஸ்லிம்கள் என்று அழைக்கப்பட முடியும். அப்பொழுதுதான் நாம் உலகத்தை நமக்கு பின்னால் வர வைக்க முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓர் அறிஞருக்கு புரிய வைத்தவாறு கூறிகிறார்கள்:

எனது அந்தஸ்து ஒரு மவ்லவிக்குரிய அந்தஸ்தல்ல. மாறாக, எனது அந்தஸ்து நபிமார்களின் நடைமுறைகளுக்கு ஒப்பான அந்தஸ்தாகும். என்னை ஒரு விண்ணின் மனிதனாக கருதுங்கள். பிறகு முஸ்லிம்களிடம் காணப்படும் இவ்வனைத்து சண்டைகளும், அனைத்து பூசல்களும் ஒரு கனத்தில் தீர முடியும். யார் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டு நீதி நெறி தீர்ப்பவராக வந்திருக்கிறாரோ அவர் திருக்குர்ஆனுக்கு கூறும் பொருளே சரியானவையாக இருக்கும். எந்த ஹதீஸை அவர் சஹீஹானது என்பாரோ அதுவே சஹீஹான ஹதீஸாக இருக்கும். இல்லையெனில் ஷியா–சன்னிகளின் சட்டைகளைப் பாருங்கள். இன்று வரை எங்கு முடிவுக்கு வருகின்றன. இதுவரை முடிவுக்கு வரவில்லை.

ஷியாக்கள் வசைபாடுகிறார்கள் என்றால் அதாவது மூன்று கலீஃபாக்களை ஏசுகின்றனர். அவர்கள் தொடர்பாக தவறான சொற்களைப் பயன்படுத்துகின்றனர் என்றால், மற்றவர்களில் சிலர் எப்படிப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர் எனில், அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றனர்.

بَرخلافت دِلَش بَسے مائل لیک بُوبکر شُد دَرمِیاں حائل

அதாவது கிலாஃபத்தின் மீது அவர்களது உள்ளம் அதிகமாக சாய்ந்திருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இடையில் வந்து விட்டார்கள். அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஆசை இருந்ததாகக் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எதுவரை இவர்கள் தமது வழிமுறையை விட்டு விட்டு என்னைச் சார்ந்தவர்களாகி பார்ப்பதில்லையோ அதுவரை இவர்கள் ஒருபோதும் உண்மையை அடைய முடியாது. இம்மக்களுக்கு வேறு நம்பிக்கை இல்லை என்றும், கடைசியில் மரணித்தாக வேண்டும் என்ற இந்த நம்பிக்கையாவது இருக்க வேண்டும். மரணித்த பிறகு தம் அசுத்தத்திலிருந்து ஈடேற்றம் கிடைக்க முடியாது.

ஏச்சுப் சேச்சுக்கள், ஓர் ஒழுக்கமான மனிதரின் பார்வையில் பிடித்தமான விஷயம் அல்லாதபோது, பிறகு தூய்மையான இறைவன் பார்வையில் இபாதத்தாக எவ்வாறு இருக்க முடியும்? இவ்வாறே மனிதன் தீமை செய்கின்றான். அநீதியிழைக்கின்றான் என்றால் பிறகு அவனது இபாதத் அல்லாஹ்வின் பார்வையில் இபாதத் எனப்படாது. எனவேதான் நான் கூறுகின்றேன்: என்னிடம் வாருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்கு உண்மை தெரியட்டும். நானோ மேலாடை முழுவதையும் அவிழ்க்க விரும்புகின்றேன். உண்மையான தவ்பா செய்து நம்பிக்கையாளராக ஆகிவிடுங்கள். நீங்கள் அணிந்திருக்கும் செயற்கையான பொய்யான கொள்கையான இந்த ஆடையை அவிழ்த்து விடுங்கள். உண்மையான தவ்பா செய்யுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் நம்பிக்கையாளர் ஆக முடியும். பிறகு எந்த இமாமுக்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ அது நானே ஆவேன்; அதற்கான சான்றை என்னிடமிருந்து பெறுங்கள் என்று நான் கூறுகின்றேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 140,141)

ஆக எதன் மூலம் மார்க்கத்தின் உண்மையான புரிதல் ஏற்பட முடியுமோ அந்த உண்மை யாதெனில், பரஸ்பர சண்டை சச்சரவுகளையும் ஆணவங்களையும் முடித்துக் கொண்டு அல்லாஹ்வுக்கு முன் ஆஜராக வேண்டும்; அவனிடம் துஆ செய்ய வேண்டும்; உண்மையான தவ்பா செய்ய வேண்டும். ஒருவன் தனது உள்ளத்தை எல்லா கலப்படங்களிலிருந்தும் தூய்மைப்படுத்தி அல்லாஹ்வுக்கு முன் குனியும் போதுதான் இது நிகழ முடியும். அல்லாஹ் சரியாக வழி நடத்துகிறான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் அந்தஸ்து, மேன்மை மற்றுமை சான்றான்மை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரின் பண்புகளை மேற்கொள்ளாதவரை எவராலும் நம்பிக்கையாளராகவோ, முஸ்லிமாகவோ ஆகவே முடியாது என்பதை நான் அறிகின்றேன். அவர்கள் பௌதீக உலகத்தோடு அன்பு கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர்கள் தம் வாழ்க்கையை இறை வழியில் அர்ப்பணித்திருந்தார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 260,261)

ஆக இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பார்வையில் இருந்த அந்தஸ்தாகும். அதாவது உண்மையான நம்பிக்கையாளராகவும், முஸ்லிமாகவும் ஆவதற்கு இந்த நான்கு கலீஃபாக்களையும் தமது முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இது இருந்தால், பிறகு பிரிவுகள் என்ன! நிலைபாடுகள் என்ன! இதைப் பற்றிய விவாதம்தான் என்ன மீதம் இருக்கும்!

ஆக இவர்கள் அனைவரும் நமக்கு முன்மாதிரிகள் என்பதே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கையாகும். இந்தக் கொள்கை இருக்கும்போது முஸ்லிம்களிடமிருந்து பிரிவினையை அகற்றி அவர்களுக்கிடையில் வேற்றுமையை களைந்து அவர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரு ஜமாஅத்தாக அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் இருந்து விடவில்லையா?

நேர்வழி காட்டப்பட்ட நான்கு கலீஃபாக்களுக்கும் ஓர் அந்தஸ்தும் மேன்மையும் இருக்கிறது. ஒவ்வொவருவரின் மேலான அந்தஸ்தை பற்றியும் பல்வேறு இடங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் விளக்கமாக

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உண்மையிலேயே அவன் (இறைவன்) இருக்கின்றான் என்பதைப் பற்றி தெரிவிப்பவர்கள் நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் மட்டுமே ஆவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 1117)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

எடுத்துரைத்துள்ளார்கள். ஒவ்வொருவரின் அந்த அந்தஸ்தை அடையாளங்கண்டு கொள்வதற்காக, நான் சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். இவ்வாறு புதிதாக வந்திருக்கக்கூடியவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கூட நமது நிலைபாடு என்ன? நாம் என்ன நம்புகிறோம்? நமது கொள்கை என்ன? என்பது புரிய வரும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அந்தக் காலத்திலும், முஸைலமா அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் ஆரம்பத்தில் முஸைலமா ஷரீஅத்தில் ஆகுமானதை மக்களை ஒன்றை கூட்டி வைத்திருந்தான். தவறான விளக்கங்களைத் தந்து, தவறான விஷயங்களை ஆகுமானதாக நிலைநிறுத்தி மக்களை ஒன்று திரட்டுவதற்காக மட்டும் தன்னுடன் இணைத்திருந்தான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இப்படிப்பட்ட தருணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவனார்கள் என்றால் எந்த அளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும் என்று மனிதன் சிந்தித்துப் பார்க்க முடியுமா? அவர்கள் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உறுதியான உள்ளத்தை உடையவர்களாக இல்லாமல் இருந்திருந்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஈமானின் நிறம் இவர்கள் ஈமானில் இல்லாமலிருந்திருந்தால் மிகவும் சிரமம் ஏற்பட்டிருக்கும்; பதற்றம் அடைந்திருப்பார்கள். ஆனால் சித்தீக் நபியின் நிழலாக இருந்தார்கள். நபியின் நிழல் இவர்கள் மீது விழுந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் தாக்கம் இவர்கள் மீது விழுந்திருந்தது. மனமோ உறுதியெனும் ஒளியால் நிரம்பியிருந்தது.

எனவே இவர்கள் எத்தகைய வீரத்தையும் உறுதித்தன்மையையும் வெளிப்படுத்திக் காட்டினார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அதன் முன்மாதிரி கிடைப்பது கடினமாகும். இவர்களின் வாழ்க்கை இஸ்லாமிய வாழ்க்கையாக இருந்தது.

இது எத்தகைய விவகாரம் எனில் இதற்கு பெரிய விவாதம் செய்ய வேண்டிய தேவை இல்லை. அந்தக் காலத்தின் நிலைமைகளைப் படியுங்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு ஆற்றிய அந்தத் தொண்டுகளைக் கணித்துப் பாருங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு இரண்டாம் ஆதம் ஆவார்கள் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இல்லாமலிருந்திருந்தால் இஸ்லாமும் இருந்திருக்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அதாவது எதிரியின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்காக ஷரீஅத்தை பாதுகாப்பதற்காக, அப்பொழுது அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களையே நிறுத்தினான். இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பான தர்பிய்யத் மற்றும் அவர்களோடிருந்த சிறப்பான தொடர்பின் காரணமாக இஸ்லாத்திற்கு வாழ்வளித்தார்கள். எதிரியின் தாக்குதல்களை தோல்வியுறச் செய்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாத்தை மீண்டும் நிலைநிறுத்தியது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீகின் மிகப்பெரும் பேருபகாரமாகும். தமது ஈமானிய ஆற்றலால் கிளர்ச்சியாளர்கள் அனைவருக்கும் தண்டனையிலிருந்து அமைதியை நிலைநாட்டினார்கள். அல்லாஹ், நான் உண்மையான கலீஃபாபின் மீது அமைதியை ஏற்படுத்துவேன் என்று கூறியதற்கேற்ப வாக்குறுதி அளித்திருந்ததற்கேற்ப செய்தார்கள். இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் நிறைவேறியது. வானமும் பூமியும் செயலளவில் சான்று பகர்ந்து விட்டன. ஆக அவர்களிடம் உண்மைத்துவம் எவ்வளவும் உயர்ந்தும் மேம்பட்டும் இருக்க வேண்டும் என்றால் இதுதான் சித்தீக்கின் இலக்கணமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 380,381)

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்பண்புகளையும் அந்தஸ்தையும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்து சஹாபாக்களில், எவ்வளவு மேலோங்கியிருந்தது என்று தெரியுமா? எதுவரை எனில் சில நேரங்களில் இவர்களின் கருத்துக்கேற்ப திருக்குர்ஆன் வசனங்கள் இறங்கி வந்தன. இவர்கள் தொடர்பாக, ஷய்த்தான் உமரின் நிழலைக் கண்டு ஓடுகிறான் என்று ஹதீஸில் வந்துள்ளது. இரண்டாவது ஹதீஸ், எனக்குப் பிறகு நபி இருந்தால் அவர் உமர் ஆக இருந்திருப்பார். மூன்றாவது ஹதீஸ், முந்தைய சமுதாயங்களில் இறையறிவிப்பைப் பெறுபவர்கள் இருந்து வந்துள்ளார்கள். இந்த உம்மத்தில் ஒருவர் இறையறிவிப்பை பெறுபவர் எனில், அவர் உமர் ஆவார்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 219)

பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோரைப் பற்றி அன்னார் கூறுகிறார்கள்:

எனது இறைவன் என்மீது வெளிப்படுத்தியுள்ளான். அதாவது சித்தீக் ஃபாரூக் மற்றும் உஸ்மான் (ரலி) ஆகியோர் நற்செயல் புரிபவர்களாகவும், நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அல்லாஹ் தேர்ந்தெடுத்த மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் இறைவனின் அருளால் சிறப்பிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள்.

பெரும்பாலான இறை ஞானம் கொண்டவர்கள் இவர்களின் உயர் குணங்களுக்கும் சான்றளித்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் மேன்மையும் சிறப்புமிக்க இறைவனின் தன்னிறைவிற்காக தங்கள் நாடுகளை துறந்தார்கள். ஒவ்வொரு போரிலும் இவர்கள் ஈடுபட்டார்கள். ஒவ்வொரு வெயிற்காலத்தின் மதியத்தின் உஷ்ணத்தையும், குளிர்காலங்களின் இரவின் கடுங்குளிரையும் இவர்கள் பொருட்படுத்தவில்லை. மாறாக, புதிதாக மலர்ந்த இளைஞர்களைப் போன்று மார்க்கத்தின் வழியில் தம்மை மாய்த்துக் கொண்டார்கள். தம்மவர்கள் பக்கமோ, அந்நியர்கள் பக்கமமோ சாயவில்லை. அல்லாஹ் ரப்புல் ஆலமீனுக்காக

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவ்வாறு கண்ணில் ஒளியிருந்தும் கூட சூரியனின் தேவை அதற்கு இருக்கின்றதோ அவ்வாறே கண்ணுக்கு ஒப்பாக இருக்கின்ற உலகின் அறிவுகள் எப்போதும் நபித்துவம் எனும் சூரியனின் தேவையுடையதாக இருக்கின்றது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 114)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

அனைவருக்கும் விடை கொடுத்து விட்டனர். இவர்களின் செயல்களில் நறுமணம் கமிழ்கிறது. இவையனைத்தும் இவர்களின் அந்தஸ்துகள் எனும் கோபுரங்களை நோக்கியும் இவர்களின் நன்மைகள் எனும் பூந்தோட்டங்களை நோக்கியும் வழிநடத்துகின்றன. அவற்றின் தென்றல் காற்று தனது நறுமணம் கமிழும் வீச்சால் இவர்களின் இரகசியங்களைத் தெரிவிக்கின்றது. இவர்களின் ஒளிகள் தமது முழுமையான பண்பால் நம்மீது வெளிப்படுகின்றன.

(சிர்ருல் குலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 25,26
ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 326)

நான் பெரும்பாலும் வாசிக்கக்கூடிய ஆதாரங்கள் சிர்ருல் குலாஃபா எனும் அரபி நூலிலிருந்து வாசிக்கிறேன். அரபு மொழிபெயர்ப்பாளர்கள் தற்சமயம் உடனடியாக அந்தத் தரத்தில் மொழியாக்கம் செய்ய முடியாமல் போகலாம். மீண்டும் மறு ஒலிபரப்பு செய்யப்படும்போது அந்த நூலிலிருந்து அந்த வாசகங்களை வைத்து மொழியாக்கம் செய்து விடுங்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உயர்வான அந்தஸ்தையும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இறையச்சமுடையவர்களாகவும், தூய அகத்தைக் கொண்டவர்களாகவும், ரஹ்மானாகிய இறைவனனிடம் மிகவும் அன்பிற்குரியவர்களாகத் திகழும், அந்த மக்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் சமுதாயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் தம் காலத்தின் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார்கள். இவர்கள் ஆதிக்கம் பெற்ற இறைவனின் சிங்கமாகவும், கருணை கொண்ட இறைவனின் வீரராகவும், வள்ளல் தன்மை கொண்டவராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும் இருந்தார்கள்.

இவர்கள் எத்தகைய தனிச்சிறப்புமிக்கவர்களாகவும் வீரராகவும் இருந்தார்கள் எனில் போர்க்களத்தில் தமது இடத்தை விட்டு அகன்று விட மாட்டார்கள். அவர்களுக்கு எதிராக பகைவர்களின் ஒரு படையே இருந்தாலும் சரியே! இவர்கள் வாழ்நாள் முழுவதும் ஏழ்மையில் கழித்தார்கள். மனித குலத்தின் தாய்மைத் தரத்தின் உச்சத்தை எட்டியிருந்தார்கள். இவர்கள் செல்வங்களை வாரி வழங்குவதிலும் மக்களின் துக்கங்களையும் துயரங்களையும் களைவதிலும், அனாதைகள், ஏழைகள் மற்றும் அண்டை அயலார்களை கவனத்திற்கு கொள்வதிலும் முதல் தரத்திலிருந்த ஆடவர் ஆவார்கள்.

இவர்கள் போர்களில் பல வகையான வீரச் செயல்களைச் செய்து காட்டினார்கள். அம்பு மற்றும் வாட்போர்களில் இவர்களிடமிருந்து வியப்பூட்டும் நிகழ்வுகள் வெளிப்பட்டு வந்தன. அத்துடன் இவர்கள் மென்மையான மொழியை பேசக்கூடியவர்களாகவும் பேச்சாற்றல் கொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். இவர்களின் எடுத்துரைப்பு உள்ளத்தின் ஆழத்தில் இறங்கும். அதனால், மூளைகளில் ஏற்பட்டிருந்த துரு பிடிப்பு தூய்மையடைந்து வந்தது. அடையாளங்களின் ஒளிகளால் இவர்களின் முகம் பிரகாசம் அடைந்து வந்தது. இவர்கள் வகை வகையான எடுத்துரைக்கும் போதனைகளில் ஆற்றல் பெற்றிருந்தார்கள். எவர் இவர்களிடம் இவ்விஷயங்களில் போட்டியிடுவாரோ அவருக்கு ஒரு தோல்வியுற்ற நபரைப் போன்று இவர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டி வந்தது. இவர்கள் எல்லாச் சிறப்புகளிலும் மொழி வளத்திலும் சொற்பொழிவுத்திறனின் வழிகளிலும் முழுமை பெற்றவர்களாக திகழ்ந்தார்கள். எவர் இவர்களின் மேன்மையை நிராகரித்தாரோ அவர் வெட்கக்கேடான வழியை மேற்கொண்டார்.

(சிர்ருல் குலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 108–110
ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 358)

பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் அந்தஸ்து தொடர்பாகவும் கிலாஃபத் தொடர்பாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் உண்மையைத் தேடுபவர்களின் நம்பிக்கைக்கு உகந்தவராகவும், வள்ளல்களுக்கு நிகரற்ற முன்மாதிரியாகவும் இறையடியார்களுக்கு சான்றை பூர்த்தி செய்யக்கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள் எனிபதில் அணுவளவும் ஐயமில்லை. மேலும் இவர்கள் தம் காலத்து மக்களில் சிறந்த மனிதராகவும் நாடுகளை ஒளிரச் செய்ய அல்லாஹ்வின் ஒளியாகவும் இருந்தார்கள். ஆனால் இவர்களின் கிலாஃபத் காலகட்டம் அமைதி நிறைந்த காலகட்டமாக இருந்திக்கவில்லை. மாறாக குழப்பங்கள் மற்றும் அநீதிகள் எனும் மந்தமான காற்று வீசக்கூடிய காலமாக இருந்தது. பொது மக்கள் இவர்களின் மற்றும் அபூ சுஃப்யானின் மகளின் கிலாஃபத் தொடர்பாக கருத்து வேறுபாடு கொண்டார்கள்.

இவர்கள் இருவரை நோக்கியும் வியப்படைந்த மனிதனைப் போன்று கண் இமைக்காமல் பார்த்து வந்தனர். சில மக்களோ இவர்கள் இருவரையும் விண்ணிலுள்ள இரு நட்சத்திரங்களுக்கு ஒப்பாக கற்பனை செய்து வந்தார்கள். இருவரையும் அந்தஸ்தில் சரிசமமானவர்களாகக் கருதி வந்தனர். ஆனால் உண்மை என்னவென்றால், உண்மை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களோடு இருந்தது. எவர் இவர்களது காலத்தில் இவர்களுடன் போரிட்டாரோ அவர் கிளர்ச்சியும் கலகமும் செய்தார்.

(சிர்ருல் குலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 95,96)

பிறகு நான்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கலீஃபாக்களின் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் பாதுகாப்புப் பணி மற்றும் இந்த அமானிதத்தின் உரிமையை நிறைவேற்றியதன் தரத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் சித்தீகே அக்பர் (ரலி), ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகிய அனைவரும் உண்மையிலேயே மார்க்கத்தில் திகழ்ந்தார்கள் என்ற இந்தக் கொள்கை அவசியமாகும். இஸ்லாத்தின் இரண்டாவது ஆதமாக திகழ்ந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இவ்வாறே ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகிய இருவரும் மார்க்கத்தில் உண்மையான நம்பிக்கைகுரியவர்களாக இல்லாதிருந்திருப்பின் இன்று நமக்கு திருக்குர்ஆனின் எந்தவொரு வசனத்தையும் கூட இறைவன் புறமிருந்து வந்ததாக நிரூபிப்பது கடினமாக இருந்திருக்கும்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவன் தன்னைத்தானே உலகத்திற்கு வெளிப்படுத்திக் காட்ட விரும்பும் போது அவனது வல்லமைகளின் தோற்றமாக இருக்கின்ற நபியை உலகில் அனுப்புகின்றான். தனது வஹியை அவர் மீது இறக்குகின்றான்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

(மக்தூபாத்தே அஹ்மது தொகுதி 2 பக்கம் 151, ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதிய கடித எண் 2)

பிறகு, இந்த நான்கு கலீஃபாக்களைப் பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் மீது ஆணையாக! இவர்கள் எப்படிப்பட்ட மக்கள் என்றால், உலகத்தில் சிறந்தவர்களான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவுவதற்காக மரண களத்தில் நிலைநின்ற மக்களாவார்கள். அல்லாஹ்வுக்காக இவர்கள் தமது தந்தையர்களையும், மகன்களையும் விட்டு விட்டார்கள். அவர்களை வாள்களால் துண்டு துண்டாக்கி விட்டனர்.

தமது அன்பர்களுடன் போரிட்டு அவர்களின் தலைகளை வெட்டி வீழ்த்தினார்கள். அல்லாஹ்வின் வழியில் தமது நயமானப் பொருட்களையும், உயிர்களையும் தியாகம் செய்தார்கள். இவ்வாறிருந்தும், தமது நற்செயல்கள் குறைவாக இருப்பதாக அழுதும் கடுமையாக வெட்கப்பட்டும் வந்தார்கள். தாம் ஒரு நற்செயல் செய்திருக்கிறோம் என்றால் எந்தப் பெருமிதமும் இருக்கவில்லை. இவர்களின் கண்கள் முழுமையான உறக்கத்தின் இன்பத்தின் பெறவில்லை. ஒருபோதும் இவர்கள் முழுமையாக உறங்கியதில்லை. மாறாக, மிகக்குறைவாக ஓய்வு என்ற வகையில் ஆன்மாவின் கட்டாய உரிமையாக இருந்த உறக்கத்தைத் தவிர முழுமையாக உறங்கியதில்லை.

இவர்கள் அருட்களை விரும்புபவர்களாக இருந்ததில்லை. பிறகு இவர்கள் அநீதி இழைத்து வந்தார்கள், பொருட்களை அபகரித்து வந்தார்கள்; நீதியாக நடக்கவில்லை; அநீதியும் கொடுமையும் இழைத்து வந்தார்கள் என்று நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்! இவர்கள் மன இச்சைகளை விட்டு விட்டு வெளிவந்து விட்டிருந்தார்கள். எப்பொழுதும் இறை சந்நிதியில் விழுந்து கிடந்தார்கள் மற்றும் இவர்கள் இறைவனுக்காக அர்ப்பணமாகக்கூடியவர்களாக இருந்தார்கள் என்பது நிரூபணமாகி விட்டது.

(சிர்ருல் குலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 32 ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 328)

ஆக இந்த கலீஃபாக்களின் மேன்மை மற்றும் அந்தஸ்து தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய புரிதல் இதுவாகும். இந்த அந்தஸ்தை ஒவ்வொரு முஸ்லிமும் இந்த சான்றோர்களுக்கு வழங்கும்போதுதான், அவர் உண்மையான முஸ்லிம் எனப்படுவார். பரஸ்பர வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வந்து ஒரே சமுதாயத்தின் அங்கமாவார். இல்லையெனில் நமது வேறுபாடுகள் இஸ்லாத்திற்கு எந்தப் பயனும் அளிக்காது; எனினும் பகைவன் அதிலிருந்து கண்டிப்பாக பலன் பெறுவான். பெற்றுக் கொண்டிருக்கின்றான்.

இன்றைய நாட்களில் நாம் இதையே பார்க்கிறோம். இக்காலத்தில் இஸ்லாத்திற்காக ஏதாவது தொண்டு செய்ய முடியுமென்றால், இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்கு ஆசை இருக்கிறதென்றால், பிறகு அல்லாஹ்வின் இந்த சிங்கத்தோடு இணைந்துதான் அதை செய்ய முடியும். அவர்களை அல்லாஹ் இக்காலத்தல் இந்தப் பணிக்காகவே அனுப்பியுள்ளான்.

நான் கூறியதுபோன்று இன்றை நாட்களில் முஹர்ரம் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம். நாள் அல்லது நாளை மறுநாள் முஹர்ரம் பத்தும் வருகிறது. அதில் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் தொடர்பாக ஷியாக்கள் தங்கள் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறார்கள். எவ்வாறு ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை ஷஹீதாக்கப்பட்டதோ நிச்சயமாக இது ஒரு அநியாயமான செயலாக இருந்தது.

ஷியாக்கள் இந்த உணர்வுகளை வெளிப்படுத்தும்போது அல்லது சாதாரண நிலைகளிலும்கூட ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் தொடர்பாகவும், ஹஸ்ரத் ஹஸன் (ரலி) தொடர்பாகவும் ஷியாக்களுக்கு இருக்கும் அந்த உணர்வுகள் காரணமாக பொதுவாக நம் தொடர்பாகவும் அல்லது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாகவும், மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தும் நுபுவ்வத்தின் வம்சத்தின் அந்தஸ்தை அடையாளம் காணவில்லை என்று கருதப்படுகிறது. இந்தத் தப்பெண்ணத்தை அஹ்மதிய்யா ஜமாஅத் எப்பொழுதும் அகற்றுவதற்கு முயற்சி செய்து வந்திருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக என்ன கூறினார்களோ அதன் சில மேற்கோள்களை நான் தற்போது எடுத்துரைக்கிறேன். இதன் மூலமாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் அந்தஸ்தும் தரமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பார்வையில் என்னவாக இருந்தது என்பதும் தெளிவாகி விடுகிறது. ஆனால் அத்துடன் மற்ற மூன்று கலீஃபாக்களும் உண்மையானவர்களாக இருந்தார்கள் என்ற விஷயத்தின் மீதும் நாம் நம்பிக்கைக் கொண்டுள்ளோம். எவ்வாறிருப்பினும் நான் தற்போது அது தொடர்பாகவும் சிலவற்றை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்கள் மற்றும் கூற்றுகளின் ஒளியில் அவர்களின் பார்வையில் நுபுவத்தின் வம்சனத்துக்கு என்ன அந்தஸ்து இருந்தது? இது தொடர்பாக அவர்கள் ஜமாஅத்திற்கு என்ன அறிவுரை வழங்கினார்கள்? என்று கூறுவேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிர்ருல் குலாஃபா என்ற நூலில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்பாகவும், மாநபி (ஸல்) அவர்களின் வம்சம் தொடர்பாகவும் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்பாக கூறினார்கள்: அவர்கள் இயலாதவர்களின் துயர் ஆற்றுவதன் பால் கவனமூட்டி வந்தார்கள். சிக்கனமான வாழ்வைக் கழிப்பவர்களுக்கும் போதுமான நிலையில் உள்ளவர்களுக்கும் உணவளிக்க கட்டளை பிறப்பித்து வந்தார்கள். அவர்கள் அல்லாஹ்வின் நெருக்கமான மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அத்துடன் அவர்கள் திருமறையின் அமிர்தத்தை பருகுவதில் முன்னிருப்பவர்களாக இருந்தார்கள். திருக்குர்ஆனின் ஞானமும் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது. மிகவும் மேலோங்கியிருந்தார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆனின் ஆழங்களைப் புரிவதில் ஒரு விநோதமான புரிதிறன் வழங்கப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் வழித்திருக்கும் நிலையில் அவர்களைக் கண்டேன். அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை சந்தித்தார்கள். விழித்திருக்கும் நிலையில் கஷ்ஃப் காட்சியில் கண்டார்கள். உறக்கத்தில் அல்ல. பிறகு இதே நிலையிலேயே அவர்கள் அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், மறைவானவற்றை அறிந்திருக்கும் இறைவனின் திருமறையின் விரிவுரையை எனக்கு வழங்கினார்கள். இது எனது தஃப்ஸீர் ஆகும். இது தற்போது தங்களுக்கு

வழங்கப்படுகிறது என்றார்கள். ஆக தங்களுக்கு இந்த அன்பளிப்பு அருளுக்குரியதாகட்டும். பிறகு நான் எனது கையை நீட்டினேன். அந்த தஃப்ஸீரைப் பெற்றுக் கொண்டேன். மேலும் நான் வழங்கக்கூடிய வல்லமை படைத்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினனே்.

பிறகு நான் அவர்களை அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை படைப்பினங்களில் தகுதியானவர்களாகவும், ஒழுக்கத்தில் உறுதியானவர்களாகவும் தன்னடக்கம் மற்றும் பணிவான இயல்பை உடையவர்களாகவும், மின்னக்கூடியவர்களாகவும் ஒளிரக் கூடியவர்களாகவும் காணப் பெற்றேன். அவர்கள் என்னை மிகவும் அன்பு நேசத்துடன் சந்தித்தார்கள் என்று நான் சத்தியமிட்டுக் கூறுகின்றேன்.

அவர்கள் என்னையும் எனது கொள்கையையும் அறிவார்கள் என்றும் எனது நிலைபாட்டிலும் கொள்கையிலும் ஷியாக்களோடு கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளையும் அவர்கள் அறிவார்கள் என்றும் எனது உள்ளத்தில் போடப்பட்டது. ஆனால் அவர்கள் எந்த வகையான விருப்பமின்மையையும், வெறுப்பையும் வெளிப்படுத்தவில்லை. என்னிடமிருந்து விலகவுமில்லை. மாறாக, அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். கலப்பற்ற அன்பர்களைப் போன்று என்னுடன் அன்பு செலுத்தினார்கள். அவர்கள் உண்மையான, தூய்மையான உள்ளம் கொண்ட மக்களைப் போன்று அன்பை வெளிப்படுத்தினார்கள்.

அவர்களுடன் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) இருவரும் மற்றும் தூதர்களின் தலைவர் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களும் உடனிருந்தார்கள். அவர்களுடன் மிகவும் அழகான தோற்றம் கொண்ட, நல்லவர்களான, கம்பீரமிக்க, அருளுக்குரிய, தூய்மையான, மரியாதைக்குரிய, ஒழுக்கமுடைய அகமும் புறமும் ஒளியின் இருப்பிடமாக இருந்த பெண்மணியும் இருந்தார்கள்.

அவர்களை நான் கவலைமிக்கவர்களாக காணப் பெற்றேன். ஆனால் அவர்கள் அதை மறைந்திருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹரா என்று எனது உள்ளத்தில் போடப்பட்டது. அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். நான் படுத்திருந்தேன். அவர்கள் அமர்ந்து விட்டார்கள். அவர்கள் எனது தலையை தன் மடி மீது வைத்துக் கொண்டாடினார்கள். பரிவை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் எனது ஏதோவொரு கவலையின் காரணமாக கவலையோடும் வேதனையோடும் இருக்கிறார்கள் என்பதையும், குழந்தைகளின் கஷ்டத்தின்போது தாய்மார்கள் காட்டுவதைப் போன்று பரிவையும் அன்பையும் நிம்மதியின்மையையும் வெளிப்படுத்துகின்றார்கள் என்பதையும் நான் பார்க்கிறேன்.

இதன் மீது எப்போதும் அசுத்தமான மவ்லவிகள் ஆட்சேபனை செய்து வருகின்றனர். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் தமது தொடையில் அவர்களின் தலை வைத்துக் கொண்டதாக அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இங்கோ குழந்தையோடு தாய்க்கு வெளிப்படும் அன்பு எடுத்துக் கூறப்படுகின்றது. ஆனால் இந்த அசுத்தமான எண்ணம் கொண்டவர்களை யார் என்ன சொல்ல முடியும்? முஸ்லிம் பொதுமக்களோ இவர்களின் பேச்சைக் கேட்டு நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை இழிவுபடுத்தி விட்டதாகக் கருதுகின்றார்கள். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோ மிகவும் அதிகமாக இப்பொழுது போகப்போக இதற்கு இன்னும் விளக்கம் கிடைத்து விடும். எவ்வாறு கூறுகின்றார்கள் என்று பாருங்கள். ஒரு தாயைப் போன்று அவர்கள் என்னோடு நடந்து கொள்கிறார்கள் என்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு எனக்கு கூறப்பட்டது. மார்க்கத் தொடர்பில் அவர்கள் பார்வையில் அதாவது ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹரா (ரலி) அவர்களின் பார்வையில் எனது அந்தஸ்து ஓர் மகனின் அந்தஸ்தைப் போன்றதாகும். பிறகு எனது உள்ளத்தில் எண்ணம் தோன்றியது. அதாவது அவர்கள் கவலையுறுவது எதைக் குறிக்கிறதென்றால், நான் சமுதாயம், நாட்டு மக்கள் மற்றும் பகைவர்களிடமிருந்து காணப்பெறும் அநீதிகளை நினைத்து கவலையுற்றிருந்தார்கள்.

எனது மகன் இந்த அநீதிகளைப் பார்க்க வேண்டியது வரும் என்று நினைத்து ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் கவலையுற்றிருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகியோர் என்னிடம் வந்தார்கள். சகோதரர்களைப் போன்று என்னிடம் அன்பை வெளிப்படுத்தினார்கள். அனுதாபிகளைப் போன்று என்னைச் சந்தித்தார்கள்.

இந்தக் கஷ்ஃப் விழித்திருக்கும்போது வரும் கஷ்ஃப்புகளில் ஒன்றாக இருந்தது. இது நடந்து பல வருடங்கள் கழிந்து விட்டன. எனக்கு ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகியவர்களோடு ஒரு உன்னதமான தொடர்பு உள்ளது. இந்தத் தொடர்பின் உண்மைத்துவம் கிழக்கு மற்றும் மேற்கின் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

நான் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் அவர்களின் இரு புதல்வர்கள் மீதும் அன்பு செலுத்துகிறேன். எவர் அவர்களோடு பகைமை கொள்வாரோ அவரோடு நான் பகைமை கொள்கிறேன். அத்துடன் நான் கொடுமையும் பலவந்தமும் செய்யக்கூடியவன் அல்ல. அல்லாஹ் என் மீது வெளிப்படுத்தியதை விட்டு நான் முகுந்திருப்புவது எனக்கு சாத்தியமே இல்லை. நான் வரம்பு மீறுபவர்களைச் சேர்ந்தவனும் அல்ல.

(சிர்ருல் குலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 110–112)

பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) தொடர்பாக இந்த கஸீதாவில் நான் எடுத்துரைத்துள்ள இது மனிதனின் செயல் அல்ல. இது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து எனக்கு தெரிவிக்கப்பட்டதாகும். எவர் தனது உள்ளத்தால், முழுமை பெற்ற மற்றும் உண்மையானவர்களான மக்களை வசைபாடுகின்றாரோ அவர் அசுத்தமானவர் ஆவார்.

ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அல்லது ஹஸ்ரத் ஈஸா (அலை) போன்ற உண்மையாளர்களை வசைபாடி விட்டு எந்த மனிதரும் ஓர் இரவு கூட உயிரோடிருக்க முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். مَنْ عَادَ وَلِيًّا لِّيْ என்ற வாக்குறுதி அவரை உடனடியாக பிடித்து விடுகிறது. எனவே விண்ணின் விவகாரங்களைப் புரிபவர், இறைவனின் நுட்பமான செயல்பாடுகளில் கவனம் செலுத்துபவர் அருளுக்குரியவராவார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

(ஈஜாஸே அஹ்மதி, ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 149)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ள இந்த ஹதீஸ் ஆதாரம் குறிப்பதாவது,

مَنۡ عَادَلِیۡ وَلِیًّا فَقَدۡ اٰذَنۡتُہٗ بِالۡحَرۡبِ அதாவது எவர் எனது வலியோடு பகைமை பாராட்டினாரோ அவரோடு போர் புரிவதற்கான அறிவிப்பை நான் செய்கிறேன். ஒருவர் மீது உள்ள அன்பை யாரிடமாவது வெளிப்படுத்தும்போது இந்த வெளிப்படுத்துதலும் தனது அவையிலேயே இருந்தால் எங்கு வேறு யாரும் இல்லையோ அங்கு வெளிப்படுத்தினால் அந்த அன்பை வெளிப்படுத்துதல் உள்ளத்தின் ஓசையாக இருக்கும். எவருக்கு அல்லாஹ் அதிக மேன்மையை வழங்கியுள்ளானோ அந்தத் தூய மனிதரின் ஒவ்வொரு சொல்லுமே உள்ளத்தின் ஓசைதான். ஆனால் வீட்டில் அமர்ந்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எதை வெளிப்படுத்தினார்கள் என்று ஆட்சேபிப்பவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களிலும், அன்னாரது சொற்பொழிவுகளிலும் அன்னாரது சபைகளிலும் மட்டுமே ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பை அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வம்சத்தின் மீதிருந்த அன்பை வெளிப்படுத்துதலை வெளிப்படையாக மட்டும் செய்யவில்லை. மாறாக, வீட்டுச் சபையில் குழந்தைகளோடு அமர்ந்து கொண்டும் தம் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இறை தூதர் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த இந்த அளவு கடந்த அன்பின் காரணமாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தோடும், சந்ததியரோடும் அவர்களின் சஹாபாக்களோடும் எல்லையற்ற அன்பு இருந்தது.

ஆக ஒரு முறை முஹர்ரம் மாதமாக இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது தோட்டத்தில் கட்டிலில் படுத்திருந்தார்கள். அவர்கள் எங்கள் சகோதரி முபாரக்கா பேகம் மற்றும் எங்கள் சகோதரர் மர்ஹூம் முபாரக் அஹ்மத் அவர்களையும், அவர்கள் உடன் பிறந்தவர்கள் அனைவரிலும் சிறியவர்களாக இருந்தார்கள். அவர்களை தம்மிடம் அழைத்து வாருங்கள். நான் உங்களக்கு முஹர்ரமின் கதையைக் கூறுகிறேன் என்றார்கள்.

பிறகு அவர்கள் மிகவும் வேதனையளிக்கக்கூடிய தோரணையில் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்வுகளை எடுத்துரைத்தார்கள். அவர்கள் இந்த நிகழ்வுகளை கூறிக்கொண்டே சென்றார்கள். அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவர்கள் தமது விரல்களால் தமது கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சென்றார்கள். இந்த வேதனை மிகுந்த கதையைச் சொல்லி முடித்த பின் அவர்கள் மிகுந்த மன வேதனையோடு இவ்வாறு கூறினார்கள்: அசுத்தமான யஸீத் இந்த அநீதியை நமது கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் பேரர் மீது செய்ய வைத்தான்.

ஆனால் இறைவனும் அந்த அநீதியிழைத்தவர்களை மிக விரைவில் தனது தண்டனையின் மூலம் பிடித்து விட்டான். அப்பொழுது அவர்கள் மீது ஒரு விநோதமான நிலைமை ஏற்பட்டிருந்தது. தமது எஜமானரின் மனதுக்கு பிடித்தவரின் வேதனை மிகுந்த ஷஹாதத்தை நினைவிற் கொண்டு வந்ததால் அவர்களின் உள்ளம் மிகவும் நிம்மதியற்றிருந்தது. இந்த அனைத்தும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அளவு கடந்த நேசத்தின் காரணமாக இருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத்தே தய்யிபா, பக்கம் 36,37)

இது தொடர்பாக சுயமாக ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா (ரலி) அவர்களும் கூறுகின்றார்கள்: ஓரிடத்தில் இந்த சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள்: ஏனெனில் அவர்களோடு இது நிகழ்ந்தது. முபாரக்கா பேகம் சாஹிபா கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோட்டத்தில் கட்டிலில் படுத்திருந்தார்கள். நானும் முபாரக்கும் ஒரு
அவர்களுக்குக் காட்டுவதற்காக கொண்டு வந்தோம். அதை அவர்கள் கண்டும் காணாமல் விட்டு விட்டார்கள்.

பிறகு கூறினார்கள்: வாருங்கள். உங்களுக்கு முஹர்ரத்தின் கதையை சொல்கிறேன். பிறகு முபாரக்கா பேகம் சாஹிபா கூறுகின்றார்கள்: நாங்கள் இவருவரும் அருகில் அமர்ந்து கொண்டோம். இது முஹர்ரம் மாதத்தின் முல் பத்து நாட்களாக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவங்களைக் கூற ஆரம்பித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: அவர்கள் நம் அன்பிற்குரிய தாயின் பேரராக இருந்தார்கள். நயவஞ்சகர்கள் அவர்களை அநியாயக்காரர்கள் மூலமாக பசியோடும் தாகத்தோடும் கர்பலா மைதானத்தில் ஷஹீதாக்கி விட்டனர்.

பிறகு அன்னார் கூறினார்கள்: பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றை எடுத்துரைக்கின்றார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்; அந்நாளில் வானம் செந்திரமாகி விட்டது. நாற்பது நாட்களுக்குள் கொலையாளிகளை, கொடுமைக்காரர்களை இறைவனின் கோபம் பிடித்து விட்டது. ஒருவர் தொழுநோயால் மரணித்தார் எனில், ஒருவர் மீது வேறு ஏதேனும் தண்டனை வந்தது. ஒருவர் மீது வேறு எதோ வந்தது. யஸீதைப் பற்றி கூறும்போது அசுத்தமான யஸீத் என்று கூறினார்கள்.

மிக நீண்ட சம்பவங்களை அன்னார் எடுத்துக் கூறினார்கள். நிலைமை எப்படி இருந்ததென்றால் அவர்கள் மீது உருக்கமான நிலைமை ஏற்பட்டிருந்தது. கண்ணீர் வடிந்து வந்தது. அதை தமது ஷஹாதத் விரலால் துடைத்து வந்தார்கள்.

(ஹஸ்ரத் சய்யிதா முபாரக்கா பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் எழுதிய தஹ்ரீராத்தே முபாரக்கா, பக்கம் 222)

இந்த கொடுமையின் கதை நிகழ்வை மனிதன் கேட்கும்போது, புல்லரித்து விடுகிறது. எதிரிகள் ஆதிக்கம் பெற்று விட்ட பிறகு ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தமது குதிரையின்


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நபிமார்கள் அலைஹிமுஸ் ஸலாமின் வருகையினால் அறிவுகள் கூர்மையாகி விடுகின்றன.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 114–117)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

திசையை நதியை நோக்கி திருப்பினார்கள். அல்லது திருப்ப முயன்றார்கள். அப்போது அவர்களின் வழி தடுக்கப்பட்டு விட்டது. ஒருவன் அம்பு எய்தான். அது அவர்களின் நாடிக்கு மேல் பட்டு மிக ஆழமான காயத்தை ஏற்படுத்தி விட்டது. பிறகு தாக்குதல் தொடுக்கக் கூடியவர்கள் மேற்கொண்டு தாக்கினர். அவர்களைத் தாக்கி ஷஹீதாக்கி விட்டனர்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஷஹீதாவதற்கு முன் நான் அவர்கள் இவ்வாறு கூறக்கேட்டேன். அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்குப் பிறகு என்னைக் கொன்றதை விட அதிகமாக இறைவன் உங்கள் மீது கோபப்படும் அளவு அப்படிப்பட்ட எந்த அல்லாஹ்வின அடியாரையும் நீங்கள் கொல்லக்கூடாது. பிறகு ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உங்களை இழிவுபடுத்தி என்மீது கருணை புரிவான் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பிறகு எனக்கான பழியை உங்களோடு எப்படித் தீர்ப்பான் என்றால் நீங்கள் வியந்து போவீர்கள்.

இந்த அநியாயக்காரர்கள் இமாம் ஹுஸைன் அவர்களோடும் அவர்களின் குடும்பத்தாரோடும் எவ்வாறு நடந்து கொண்டார்கள். ஷஹீதாக்கினார்கள். ஷஹீதாக்கிய பிறகு கூடாரங்களை சூரையாடினார்கள். பெண்களின் தலையிலிருந்து போர்வையைக் அவித்தார்கள். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் அவர்களின் சடலத்தின் மீது ஷஹீதாக்கிய பிறகு அவர்களின் படைத் தளபதி அழைத்தான்: அந்தோ அவர்களின் சடலம் படுக்க வைக்கப்பட்டுள்ளது. அதன் மீது யார் குதிரையை ஓட்டிச் செல்வார் என்றான். பத்து குதிரை சவாரிகள் தயாரானார்கள். அவற்றை ஓட விட்டு சடலம் சிதைக்கப்பட்டது. அவர்களின் இடுப்பு எலும்புகளும் விலா எலும்புகளும் துண்டு துண்டாக்கப்பட்டன.

ஓர் அறிவிப்பின்படி அவர்களின் உடலின் 33 காயங்கள் ஈட்டிகளைக் கொண்டும், 43 வாள் வீச்சுக் காயங்களும் இருந்தன. அம்பு காயங்கள் இவையல்லாமல் கூடுதலாக இருந்தன. பிறகு அவர்களின் தலை வெட்டப்பட்டு ஆளுநருக்கு அனுப்பட்டது. அவன் இந்தத் தலையை கூஃபாவில் நட்டி வைத்தான்.

(அக்பர் ஷா நஜீப் ஆபாதி அவர்கள் எழுதிய தாரீக் இஸ்லாம், பாகம் 2 பக்கம் 76 – 1998 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

அநீதியின் உச்சகட்டம். எந்தவொரு மோசமான எதிரியும் கூட இவ்வாறு செய்ய மாட்டான். இதை நான் சுருக்கமாக கூறி இருக்கிறேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தபோது இந்த சம்பவத்தினால் வேதனையின் காரணமாக அவர்களின் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

பிறகு நாம் நபியின் வம்சத்தின் மீது அன்பு கொள்ளவில்லை. அல்லது அதைப் பற்றிய புரிதல் நமக்கு இல்லை என்று எவ்வாறு கூற முடியும் – நவூதுபில்லாஹ். மாறாக, ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் கடுமையாக ஜமாஅத்திற்கும் அறிவுரை வழங்கினார்கள். ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தொடர்பாக தவறான சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தெரிய வந்தபோது, அவர்கள் கூறினார்கள்:

தெளிவாகட்டும். ஒரு நபருடைய அஞ்சல் அட்டை மூலமாக தம்மை என் ஜமாஅத்தோடு இணைத்துக் கொள்பவர்களான சில அறிவீனர்கள் தொடர்பாக அவர்கள் இவ்வாறு கூறியதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதாவது ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தொடர்பாக, காலத்தின் கலீஃபா அதாவது யஸீதிடம் பைஅத்து செய்யாததால் ஹுஸைன் (ரலி) அவர்கள் நவூதுபில்லாஹ் கிளர்ச்சியாளராக இருந்தார்கள்; யஸீத் உண்மையில் இருந்தான் என்று. இதுபோன்ற சொற்களை அவர்கள் கொண்டு வருகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

لَعْنَتُ اللهِ عَلَى الْكَاذِبِيْنَ என்னுடைய ஜமாஅத்தின் எந்தவொரு உண்மையாளரின் நாவிலிருந்து இத்தகைய கீழ்த்தரமான சொற்கள் வெளிப்பட்டிருக்கும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் அத்துடன் எனது உள்ளத்தில் இன்னொரு சிந்தனையும் வருகிறது. பெரும்பாலான ஷியாக்கள் தங்களின் தொடர்ச்சியான வசைமொழிகளிலும் பழித்துரைப்புகளிலும் என்னை இணைத்துள் கொண்டார்கள். எனவே ஏதாவதொரு மூடர் அறிவீனமான பேச்சுக்கான பதிலை அறிவீனமான முறையில் வழங்கியிருக்கலாம். அதில் ஆச்சரியம் இல்லை.

எடுத்துக்காட்டாக சில மூட முஸ்லிம்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மை மீது கிறித்தவர்கள் தீயச் சொற்களைப் பயன்படுத்தும்போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக சில கடினமான சொற்களை பயன்படுத்தி விடுகின்றனர். எவ்வாறிருப்பினும் நான் இந்தப் பிரசுரம் மூலமாக ஜமாஅத்திற்கு இதைத் தெரியப்படுத்துகிறேன்.

யஸீது ஒரு அசுத்தமான இயல்பைக் கொண்ட உலகப் புழுவாக இருந்தான். அநீதியிழைப்பவனாக இருந்தான் எந்த அடிப்படையில் ஒருவர் நம்பிக்கையாளர் எனப்படுவாரோ அவை அவனிடம் காணப்படவில்லை. நம்பிக்கையாளர் ஆவது ஒன்றும் எளிய காரியம் அல்ல. இப்படிப்பட்ட மக்கள் தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்:

قَالَتِ الْاَعْرَابُ اٰمَنَّا قُلْ لَّمْ تُؤْمِنُوْا وَلٰكِنْ قُوْلُوْا اَسْلَمْنَا

எவர்களுடைய நற்செயல்கள் அவர்களின் ஈமானுக்கு சான்றளிக்கின்றனவோ; எவர்களுடைய உள்ளத்தில் ஈமான் எழுதப்பட்டுகிறதோ; எவர்கள் தமது இறைவனையும் அவனது விருப்பத்தையும் ஒவ்வொன்றின் மீதும் மேலோங்கச் செய்கின்றார்களோ; இறையச்சத்தின் குறுகலான வழியை இறைவனுக்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றார்களோ; எவர்கள் அவனுடைய அன்பில் மூழ்கி விடுகின்றார்களோ; சிலையைப் போன்று இறைவனிடமிருந்து தடுக்கக்கூடிய ஒவ்வொரு விஷயத்திலிருந்தும், அது ஒழுக்க நிலையாக இருக்கட்டும்.

தீய நடத்தைகளாக இருக்கட்டும்; கவனமின்மையாகவோ சோம்பேறியாகவோ இருக்கட்டும். அவற்றிலிருந்து தம்மை தூர விலக்கிக் கொண்டு செல்கிறார்களோ அவர்களே நம்பிக்கையாளர்கள். யஸீதுக்கு எங்கள் இந்த விஷயங்கள் கிடைக்கப் பெற்றன?

உலகத்தின் மீதான அன்பு அவனைக் குருடனாக்கி விட்டது. ஆனால் ஹுஸைன் (ரலி) அவர்கள் தூய்மையானவர்களாக இருந்தார்கள். ஐயமின்றி அல்லாஹ் தன் கரங்களால் தூய்மைப்படுத்தும் அந்த மக்களைச் சேர்ந்தவர்களாகவும் தமது அன்பில் இறைவன் மூழ்கச் செய்யும் அந்த மக்களைச் சேர்ந்தவராகவும் அவர்கள் இருந்தார்கள். ஐயமின்றி அவர்கள் சொர்க்கத்தின் தலைவர்களில் ஒருவராவார்கள்.

அவரோடு அனுவளவும் காழ்ப்புணர்ச்சி கொள்வது ஈமானைப் பறிப்பதற்கு காரணியாகி விடும். அந்த இமாமின் இறையச்சமும்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

இறையன்பும் பொறுமையும் உறுதிப்பாடும் தூய்மையும் இபாதத்தும் நமக்கு அழகிய முன்மாதிரியாகும். நாம் அந்த குற்றமற்றவர்களுக்கு கிடைத்த நேர்வழியைப் பின்பற்றக் கூடியவர்களாவோம். அவரது எதிரியாக இருக்கும் அந்த உள்ளம் அழிந்து விட்டது. செயல் அளவில் அவர் மீதான அன்பை வெளிப்படுத்தக்கூடிய உள்ளம் வெற்றி பெற்று விட்டது. அவருடைய ஈமான், நல்லொழுக்கம், வீரம், இறையச்சம், உறுதித்தன்மை மற்றும் இறையன்பு ஆகியவற்றின் அனைத்து வடிவங்களின் பிரதிபிம்பமாக முழுமையாக பின்பற்றுவதோடு தன்னில் கொள்பவருடைய ஒரு அழகான மனிதனின் வடிவம் இருப்பதுபோன்று.

இவர்கள் உலகின் கண்களிலிருந்து மறைந்திக்கின்றார்கள். இவர்களிலிருந்தே இருப்பவர்களைத் தவிர வேறு யாருக்கு இவர்களின் மதிப்பு தெரியும்? உலக கண்களால் அவர்களை அடையாளம் காண முடியாது. ஏனெனில் அவர்கள் உலகை விட்டு வெகு தூரம் சென்று விட்டனர். இதுவே ஹுஸைன் அவர்களின் ஷஹாதத்துக்குக் காரணமாக இருந்தது. ஏனெனில் அவர் அடையாளம் காணப்படவில்லை. உலகம் எந்தத் தூய மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரிடம் தான் அவரது காலத்தில் அன்பு கொண்டிருக்கிறது? ஹுஸைன் அவர்களிடம் கொள்வதற்கு?

சுருக்கமாக, ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை இழிவுபடுத்துவது மிகவும் துர்பாக்கியமும், நம்பிக்கையின்மையும் ஆகும். மேலும் எவர் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களையோ அல்லது தூய்மையான இமாம்களில் ஒருவரான வேறு யாராவது சான்றோர்களையோ இழிவுபடுத்துகிறாரோ அல்லது அவர்கள் அஞ்சியதாக அவர்கள் தொடர்பாக ஏதேனும் சொற்களைத் தன் நாவில் கொண்டு வருகிறாரோ அவர் தன் ஈமானை வீணடிக்கிறார். ஏனெனில், தன்னுடைய சான்றோர்களுக்கும் அன்பர்களுக்கும் பகைவராக இருக்கும் அந்த நபருக்கு அல்லாஹ்வும் பகைவனாகி விடுகிறான்.

(மஜ்மூஆ இஷ்திஹார் தொகுதி 2 பக்கம் 653, 654, இஷ்திஹார் எண் 270 ‘‘தப்லீக்கே ஹக்’’ – ரப்வாவில் அச்சிடப்பட்டது)

இவையனைத்தையும் கேட்ட பிறகும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களின் வம்சத்தின் மீது அன்பு இருந்திருக்கவில்லை என்று நாம் எவ்வாறு கூற முடியும்? எந்த அன்பின் புரிதல் அவர்களுக்கு இருந்ததோ அது வேறு யாருக்கும் இருக்க முடியாது. இதையே அவர்கள் கூறியும் இருக்கிறார்கள். ஆனால் எங்கு ஷியாக்கள் தீராப்பகை என்ற அளவு சென்று விட்டார்களோ அங்கு அவர்களுக்கு உண்மைத்துவத்தையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

எங்கு சுன்னத் ஜமாஅத்தினர் தவறானவர்களோ அங்கு சீர்திருத்தத்தை ஏற்படுத்துங்கள் என்று அவர்களுக்கு கூறினார்கள். இதுவே நெறி தீர்ப்பவரின் பணியாகும். இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பரப்புவதற்கும் அதை வழக்கப்படுத்துவதற்குமான இந்தப் பணிக்காகவே அல்லாஹ் அவர்களை அனுப்பியிருந்தான். அவ்வாறிருந்தும் இந்த இரு பெரும் பிரிவுகளும் அஹ்மதிகளையே தவறாகக் கூறுகிறார்கள். நம்மையே அநீதிகளுக்கு இலக்காக ஆக்கப்படுகிறது. ஆனால், அவ்வாறிருந்தும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அந்தப் பணியை நாம் பொறுமையோடும் உறுதிப்பாட்டோடும் தொடர வேண்டும்.

அதற்காகவே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தோம். அதாவது உண்மையான இஸ்லாத்தை உலகில் பரப்ப வேண்டும். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் நமக்குக் காட்டிய அந்த முன்மாதிரியை நம்முன் வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

*அவர்கள் தங்களை யஸீதாக்கிக் கொண்டு உங்களை ஹுஸைனாக ஆக்குகின்றார்கள். இது எவ்வளவு மலிவான வாணிபமாக உள்ளது.*

(கலாமே மஹ்மூது, பக்கம் 154)

எதிரிகளை அம்பு எய்துமாறு விட்டு விடுங்கள்.எனவே இம்முறை நமது தியாகங்கள் வீண்போகாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள்: எனக்கு ஹுஸைனோடு தொடர்பு இருக்கிறதுதான்; ஆயினும் இப்போது அந்த விளைவு ஏற்படாது. மாறாக, இம்முறை விளைவு அதற்கு நேர்மாறாக இருக்கும். ஏனெனில் வெற்றி கிடைக்க வேண்டும் என்றே அல்லாஹ் நிர்ணயித்துள்ளான். எனவே இம்முடைய ஹுஸைனின் பண்புடையோருக்கு வெற்றி கிடைக்கும். இன்ஷா அல்லாஹ். வெளிப்படையான வெற்றியும் கிடைக்கும். மேலும் எதிரிகள் தோல்வியடைந்து போவார்கள்.

(அல் ஃபஸல் இன்டர்நேஷனல் 31 டிசம்பர் 2010 பக்கம் 8 குத்பா ஜுமுஆ 10 டிசம்பர் 2010 & குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 8 பக்கம் 635,636 – குத்பா ஜுமுஆ 10 டிசம்பர் 2010)

எனவே நாம் இதற்காக இன்றைய நாட்களில் குறிப்பாக இம்மாதத்திலும், மேலும் நிரந்தரமாகவும்; பகைமையும் இன்றைய நாட்களில் உச்சத்தில் இருக்கிறது. மிகவும் அழுத்தமாக இருக்கிறது. பாகிஸ்தானிலும் மற்ற இடங்களிலும் உள்ளது. துஆக்களில் அதிக அழுத்தம் கொடுங்கள். சலவாத் ஓதுவதன் மீது அதிக அழுத்தம் கொடுங்கள். எவ்வளவு விரைவாக நாம் அல்லாஹ்வின் முன் குனிவோமோ அவ்வளவு விரைவாக அல்லாஹ் நமக்கு வெற்றியை வழங்குவான்.

இந்த நாட்களில் குறிப்பாக மற்ற முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அந்த முஸ்லிம் பிரிவினர் ஒருவர் மற்றவரின் தலையை வெட்டுவதில் மூழ்கியுள்ளனர். இந்த நாட்களில் குறிப்பாக முஹர்ரம் 10 வரும்போது, வரலாறு நமக்கு இதுவரை எடுத்துரைப்பது என்னவென்றால், எங்காவது இமாம்களின் உயர்மன்றங்களிலும், பலரது மண்ணறை போன்ற உருவக அமைப்பு இடங்களிலும் அல்லது பல்வேறு இடங்களிலும் தாக்குதல்களும் தொடுக்கப்படுகின்றன. பிறகு பல மக்களை ஷஹீதாக்கப்படுகிறது. மார்க்கத்தின் பெயரில் ஷஹீதாக்கப்படுகிறது.

ஆக அல்லாஹ் அறிவை வழங்குவானாக. குறைந்தபட்சம் இவ்வாண்டு எங்கிருந்தும் இதுபோன்ற தகவல் ஏதும் கிடைக்கக் கூடாது. எந்த நாட்டிலிருந்தும் அங்கு முஸ்லிம்கள் முஸ்லிம்களைக் கொன்றனர் என்று தகவல் கிடைக்கக் கூடாது. அல்லாஹ் நிர்ணயித்துள்ள இஸ்லாத்தின் வெற்றி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமே நிர்ணயித்துள்ளான் என்ற உண்மையை விரைவில் புரிபவர்களாவார்களாக. காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதிலேயே நமது வெற்றி இருக்கிறது என்ற இந்த விஷயம் அவர்களுக்குப் புரியட்டுமாக. அல்லாஹ் அவர்களுக்கு நல்வாய்ப்பையும் வழங்குவானாக.

தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முக்னீ

......☆......☆......☆......

எல்லோரிடத்தும் அன்பு;
எவரிடத்தும் இல்லை வெறுப்பு

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 01 Oct 2020 Issue No. 40

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

## நீங்கள் இறைவனுடன் எத்தகைய தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்றால் உங்களின் மிகச் சிறந்த நேரத்தில் உங்களுக்கு மரணம் வர வேண்டும்

فَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ என்ற சூரா பக்கராவின் 133 வது வசனத்தின் விளக்கவுரையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

فَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ அதாவது கட்டுப்படும் நிலையிலே அன்றி உங்களுக்கு மரணம் வர வேண்டாம். இதற்கு இரண்டு பொருட்கள் உள்ளன. ஒன்று, எல்லா நேரமும் இஸ்லாத்தில் நிலைத்திருங்கள். மரணத்தைப் பற்றி அது எப்போது வரும் என எந்த மனிதனும் கூற முடியாது. எனவே நீங்கள் எப்போதும் ரப்புல் ஆலமீனுக்கு கட்டுப்பட்டவாறு இருப்பது உங்களின் கடமையாகும். எனவே நீங்கள் எப்போதும் ரப்புல் ஆலமீனுக்கு கட்டுப்பட்டவாறு இருப்பது உங்களின் மீது கடமையாகும். இறைவனுக்கு கட்டுப்பட்டவாறு உங்கள் வாழ்க்கையை வாழுங்கள். அப்போதுதான் மரணம் வரும்போது அவன் உங்களை கட்டுப்பட்டு நடக்கும் நிலையைத் தவிர வேறு எந்த நிலையையும் காண மாட்டான்.

இரண்டவாது, அல்லாஹ் உங்களால் சகித்துக் கொள்ளவே முடியாத அளவுக்கு நீங்கள் அவனுடன் தொடர்பை அதிகப்படுத்துங்கள். மேலும் நீங்கள் முழுமை நம்பிக்கை கொண்டவர்களாகவும், அவனது திருப்தியை பெற்றவராகவும் மாறிவிட்ட பிறகு அவன் உங்களுக்கு மரணத்தை தர வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்றத் தாழ்வுகளின் நிலைகள் வருகின்றன என திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகிறது. சில நேரத்தில் மனிதன் அல்லாஹ்வின் மீதான அன்பினால் எந்த அளவுக்கு மூழ்கி விடுகின்றான் என்றால் உலகத்தையும் மறந்து விடுகின்றான். மேலும் சில நேரத்தில் மற்றவற்றின் மீது எந்த அளவுக்கு கவனம் ஏற்படுகிறது என்றால் அதனால் அவன் இறைவனை மறந்து விடுகின்றான்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் நயவஞ்சகன் ஆகி விட்டேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் தங்களிடம் வரும்போது எனது நிலை வேறொன்றாக இருக்கின்றது. மேலும் வீட்டுற்கு செல்லும்போது எனது நிலை வேறொன்றாக ஆகி விடுகின்றது என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இது ஒன்றும் பதற்றப்பட வேண்டிய விஷயமல்ல. எல்லா நேரமும் ஒரே நிலையாக இருந்தால் மனிதன் மரணமடைந்து விடுவான் என்று கூறினார்கள்.

உண்மையில் ஏற்றத் தாழ்வுகளுக்கும் பல நிலைகள் இருக்கின்றன. முழுமையான நம்பிக்கை கொண்டவர்களின் தாழ்வு நிலை என்பது அவரை விட கீழான நிலையிலுள்ளவருக்கு ஏற்றமான நிலையாக இருக்கின்றது. அவ்வாறே நபிமார்களுக்கும் ஏற்ற நிலை, தாழ்வு நிலை வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் நபிமார்களின் தாழ்வுநிலை என்பது சித்தீகுகளின் நிலையாகும். எனவேதான் حَسَنَاتُ الْاَبْرَارِ سَيِّئَاتُ الْمُقَرَّبِيْنَ என்று சூஃபிகள் கூறியிருக்கின்றார்கள். அதாவது நல்லவர்களின் நன்மைகளும், இறை நெருக்கம் பெற்றவர்களுக்கு தீமையாக இருக்கின்றன. இதன் பொருள், மத்திய படித்தங்களிலுள்ள மக்கள் எவற்றை நன்மை என கருதுகின்றார்களோ அது உயர்ந்த படித்தங்களை கொண்ட மக்களின் பார்வையில் சில நேரத்தில் தீமைகளாகி விடுகின்றன. மேலும் மத்திய படித்தரங்களிலுள்ள மக்களின் தீமைகள் தாழ்வு நிலைமைகளிலுள்ள மக்களின் நன்மையாகி விடுகின்றன. எனவே இந்த இரண்டு நிலைகளும் மனிதனுக்கு வந்து கொண்டிருக்கின்றன. மரணத்தின் நேரம் பற்றி யாருக்கும் தெரியாது. எனவே உங்களின் மிகச் சிறந்த நேரமாக இருக்கும் நிலையில் உங்களுக்கு மரணம் வர வேண்டும். மேலும் உங்களுக்கு இறைவனுடன் உண்மையான மற்றும் கலப்பற்ற தொடர்பு ஏற்பட்டிருக்கும் நேரத்தில் மலகுல் மவ்த் உங்களின் உயிரை கைப்பற்ற வேண்டும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 202,203 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

சிந்தனையால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உடன ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்று எனக்கு அபூபக்ர் அவர்களுடன் சண்டை ஏற்பட்டு விட்டது. அதனால் எனக்கு வருத்தம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இதைக்கேட்டு மிகவும் கோபம் ஏற்பட்டு விட்டது. நீங்கள் அவருக்கு துன்பம் கொடுப்பதை விட்டும் ஏன் விலகியிருப்பதில்லை? நீங்கள் இஸ்லாத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும்போது அவர் என் மீது ஈமான் கொண்டார். அவர் எனக்கு கை கொடுத்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மன்னிப்பு கேட்டுக் கொண்டிக்கும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னைப்பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஏதும் கூறிவிடக்கூடாதே என்ற சிந்தனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தோன்றியது.

எனவே அவரும் ஓடி வந்தார்கள். நான் சென்று எனது தவறு அல்ல; உமருடைய தவறாகும் என்று கூறுவதற்காக அபூபக்ர் அவர்களும் ஓடி வந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வாயிலில் நுழைந்தவுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கு இருப்பதையும், மன்னிப்பு கேட்டுக் கொண்டிருப்பதையும் கண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கோபப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முழங்காலிட்டு உட்கார்ந்து விட்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டுமாக. எனது குற்றமாகும். உமரின் குற்றமல்ல என அபூபக்ர் (ரலி) கூறினார்கள். இவ்வாறு அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மீது இருந்த கோபத்தை அகற்ற முயற்சி செய்தார்கள். இதுதான் அவர்களிடம் இருநத நன்மையில் ஒருவரையொருவர் முந்திக் கொண்டிக்கும் ஆன்மாவாகும். குற்றம் உமர் (ரலி) அவர்களுடையதாகும். ஆனால் அபூபக்ர் (ரலி) மன்னிப்பு கேட்கிறார்கள். இவ்வாறு உமர் (ரலி) அவர்கள் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கோபத்தை நீக்கினார்கள். உண்மையில் இஸ்லாத்திற்கும் மற்ற மார்க்கங்களுக்கும் இடையிலுள்ள பல சிறப்புகளுள் இதுவும் ஒன்றாகும். அது மிகவும் தெளிவாக நிரூபணமாகின்றன. மேலும் அதில் இன்னொரு வித்தியாசம் மற்ற மார்க்கங்கள் நன்மையின் பக்கம் அழைக்கின்றன. ஆனால் இஸ்லாம் முந்திச் செல்வதன் பக்கம் அழைக்கிறது. (தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 254,255 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad